# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 179/மா/2019**
**ஆணை நாள்: 28.2.2020**

திரு. I.H. சேகர்,
ஈஞ்சம்பாக்கம்,
சென்னை – 600 115.

– முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள்,
மண்டலம் – 15,
பெருநகர சென்னை மாநகராட்சி.

– எதிர் மனுதாரர்கள்

சென்னை – 115, ஈஞ்சம்பாக்கம், டாக்டர் நஞ்சுண்டராவ் சாலை, எண்.20 என்ற முகவரியில் வசிக்கும், திரு. I.H. சேகர் என்பவரது 06.11.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 8.11.2019 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.179/மா/2019 எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது 6.11.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் பெருநகர சென்னை மாநக்ராட்சி 15வது மண்டலம், 198வது வார்டு, குமிடியாண்டி தோப்பு, பனையூர் பகுதியில் உள்ள பள்ளிக்கூடசாலை பல ஆண்டுகளாக சாலை அமைக்கப்படாமலும், ஆக்கிரமிப்புகளுககுள்ளாகி உள்ளது என்றும், இப்பகுதியில் அமைந்துள்ள அரசுப் பள்ளியில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையில் படிக்கும் சுமார் 1000 மாணவர்கள் பள்ளிக்கு சென்று வருகின்றனர் என்றும், எனவே இச்சாலையினை செப்பனிட்டு தர வேண்டும் என்றும், இச்சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீது சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலர் சமர்ப்பித்துள்ள 27.12.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த சாலை முழுவதும் சீரமைக்க CMCDM-2019-2020 திட்டத்தின் கீழ் ரூ.41.18 லட்சத்தில் மதிப்பீடு

தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கும் தருவாயில் உள்ளது என்றும், சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்றும் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் குமிடியாண்டி தோப்பு பள்ளிக்கூட சாலை கிழக்கு கடற்கரை சாலை சந்திப்பிலிருந்து முதல் 40 மீட்டர் தவிர்த்து மீதமுள்ள சாலைப்பணியினை மேற்கொள்ள தடையில்லா சான்று வழங்கியுள்ளது என்றும் மண்டல அலுவலர் உள்ளிட்ட பொறியாளர்கள் முன்னிலையில் 23.12.2019 அன்று களஆய்வு மேற்கொண்டு அனைத்து ஆக்கிரமிப்பாளர்களுக்கும் தாங்களவே ஆக்கிரமிப்புகளை அகற்ற வலியுறுத்தப்பட்டது என்றும், இச்சாலை பணிகளுக்கான ஆணை வழங்கப்படவுடன் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் தடையில்லா சான்று வழங்கிய பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் முழுவதும் அகற்றப்பட்டு சாலைப்பணி மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 31.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 15, வார்டு 198, குடுமியாண்டி தோப்பு, பனையூர் பகுதியில் பல ஆண்டு காலமாக சாலை அமைக்கப்படாமலும், ஆக்கிரமிப்பு அகற்றப்படாமலும் இருந்து வருகிறது என்றும், இது குறித்து மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோருக்கு பல மனுக்கள் அனுப்பியுள்ளதாகவும். ஆனால் எந்த பணியும் நடக்கவில்லை என்றும் மக்களுக்கும் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கும் இடையூறாக உள்ளது என்றும், அவசர காலங்களில் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர் என்றும், எனவே, நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வரும் இக்கோரிக்கை நிறைவேற்றுவதற்கு உரிய ஆணையிடுமாறு கோரினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் 31.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மண்டலம் 15, வார்டு 198 ல் பனையூர், குடுமியாண்டி தோப்பு, பள்ளிக்கூட சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் முழுவதும் கிராம நத்தம் என்பதால் ஒரு பகுதிக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும், மீண்டும் வருவாய்துறை மூலமாக நில அளவீடு செய்யப்படவுள்ளது என்றும், இன்னொரு பகுதிக்கு பட்டா வழங்கவில்லை என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதிக்கு சாலை அமைப்பதற்கு ரூ.54.29 லட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்து தற்போது ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளது என்றும், எனவே, விரைவில் அந்த பணி முடிக்கப்படும் என தெரிவித்தனர்.

மேலும், சென்னை பெருநகர குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலமாக பாதாள சாக்கடை திட்டம் சுமார் 40 மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்க வேண்டி உள்ளது என்றும், அந்த பணிகளை விரைந்து முடிக்குமாறு சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்ற

வாரியத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அப்பணி முடிவு பெற்ற பின்பு சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்றும், அப்பணி விரைந்து முடித்து சாலை அமைக்கும் பணியும் தொடர்ந்து தாமதமின்றி செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் கோரிக்கை வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலர், செயற்பொறியாளர் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்கு மூலங்கள், ,மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு மண்டல அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டது. மண்டல அலுவலர் இப்பொருட்பாடு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு சாலை அமைக்கும் பணியினை விரைந்து முடித்துவிட பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்பட்டது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

(1) திரு. I.H. சேகர்,
எண். 20, டாக்டர் நஞ்சுண்ட ராவ் சாலை,
ஈஞ்சம்பாக்கம், சென்னை – 600 115.

(2) மண்டல அலுவலர்,
மண்டலம் -15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 20, ராஜீவ்காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை -600 119.

(3) செயற்பொறியாளர்,
மண்டலம் -15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 20, ராஜீவ்காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை -600 119.

(4) உதவி செயற்பொறியாளர்,
மண்டலம் -15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 20, ராஜீவ்காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை -600 119.

(5) உதவி பொறியாளர்,
கோட்டம் 198, மண்டலம் -15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 20, ராஜீவ்காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை -600 119.

**நகல்**

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்